செய்தி வெளியீடு எண்:227 நாள்: 24.04.2017

# செய்தி வெளியீடு

## சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள்–2016 மற்றும் தமிழ்ச் செம்மல் விருதுகள்–2015க்கான விருதாளர்கள் அறிவிப்பு

தமிழுக்குத் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழறிஞர்கள் பெயர்களாலும் தன்னலமற்ற தலைவர்கள் பெயர்களாலும் விருதுகள் ஏற்படுத்தப்பட்டு அந்தந்த விருதுகளுக்கான சான்றோர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வகையில், கடந்த 2011ஆம் ஆண்டுக்கு முன்பு தமிழ் வளர்ச்சிக்கான விருதுகள் 5 மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலையில், தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவரும் சான்றோர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் புதியதாக 55 விருதுகள் அறிவிக்கப்பெற்றன. 2016ஆம் ஆண்டிற்கான சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள், 2015ஆம் ஆண்டிற்கானத் தமிழ் செம்மல் விருது ஆகிய விருதுகளுக்கான விருதாளர்கள் அரசால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2016–ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தாய் விருது சிறந்த தமிழ் அமைப்பான மாணவர் மன்றத்திற்கும் **கபிலர் விருது** – முனைவர் இல.க. அக்னிபுத்திரன் அவர்களுக்கும், **உ.வே.சா விருது–** முதுமுனைவர் ம.அ. வேங்கடகிருஷ்ணன் அவர்களுக்கும், **கம்பர் விருது–** திரு. இலங்கை ஜெயராஜ் அவர்களுக்கும், **சொல்லின் செல்வர் விருது** – திரு. பி. மணிகண்டன் அவர்களுக்கும், **ஜி.யு.போப் விருது–** திருமதி வைதேகி ஹெர்பர்ட் அவர்களுக்கும், **உமறுப்புலவர் விருது–** பேராசிரியர் முனைவர் தி.மு. அப்துல் காதர் அவர்களுக்கும், **இளங்கோவடிகள் விருது–** திரு. நா. நஞ்சுண்டன் அவர்களுக்கும், **அம்மா இலக்கிய விருது–** திருமதி ஹம்சா தனகோபால் அவர்களுக்கும், **மொழிபெயர்ப்பாளர் விருது** –திருமதி நாகலட்சுமி சண்முகம், முனைவர் அ. ஜாகிர் உசேன், திரு. அல்லா பிச்சை (எ) முகம்மது பரிஸ்டா, திருமதி உமா பாலு, முனைவர் கா.செல்லப்பன், செல்வி வி. சைதன்யா, திரு. சி.முருகேசன்,

திரு.கு.பாலசுப்பிரமணியன், திரு.ச.ஆறுமுகம்பிள்ளை, முனைவர் கே.எஸ். சுப்பிரமணியன் ஆகியோருக்கும் **2015ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது–** திரு.செ.முரளி (எ) செல்வ முரளி அவர்களுக்கும்,

மேற்கூறிய விருதுகளைப் பெறுபவர்கள் ஒவ்வொருவருக்கும் பரிசுத் தொகையாக ரூபாய் 1 இலட்சமும், 1 சவரன் தங்கப் பதக்கமும், தகுதிச் சான்று மற்றும் பொன்னாடையும் வழங்கப்படும். மற்றும் தமிழ்த்தாய் விருது பெறும் தமிழ் அமைப்பிற்கு விருதுத் தொகையாக ரூபாய் 5 இலட்சமும், கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

**2015ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருது கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் என்ற வகையில் கீழ்க்கண்டவாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சென்னை–**திரு.வேம்பத்தூர் (எம்) கிருட்டினன், **திருவள்ளூர்–** முனைவர் மா.கி. இரமணன், **காஞ்சிபுரம் –**திரு கூ.மு. துரை (எ) கவிஞர் கூரம் துரை, **வேலூர் –** திரு.வி. பத்மநாபன் (எ) புலவர் வே. பதுமனார், **கிருட்டினகிரி –** திரு.ந. நாகராசன், **திருவண்ணாமலை –** திரு.பா.இந்திரராசன், **விழுப்புரம் –** கவிஞர் பெ. ஆராவமுதன், **கடலூர் –** முனைவர் அரங்க. பாரி, **பெரம்பலூர் –** திரு.செ. சுந்தரம் (எ) வெண்பாவூர் செ. சுந்தரம், **அரியலூர் –** திரு.ம. சோ. விக்டர், **சேலம் –** கவிஞர் பி. வேலுசாமி, **தருமபுரி –** திரு. தகடூர். வனப்பிரியனார் என்கிற கா. இராமசந்திரன், **நாமக்கல் –** புலவர் மா. சின்னு, **ஈரோடு–** முனைவர் ச.சந்திரகுமாரி, **கரூர்–** திரு. ச. வரதசிகாமணி, **கோயம்புத்தூர் –** முனைவர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன், **திருப்பூர் –** திரு. ஆ. முருகநாதன், **நீலகிரி –** திருமதி மணி அர்ச்சுனன், **திருச்சிராப்பள்ளி** – பேரா. தி.வெ. இராசேந்திரன், **புதுக்கோட்டை –** திரு.ஞானாலயா பா. கிருட்டினமூர்த்தி, **சிவகங்கை–** திரு.தி.அனந்தராமன், **தஞ்சாவூர்–**புலவர் தங்கராசு, **திருவாரூர்–** திரு. வீ.இராமமூர்த்தி, **நாகப்பட்டினம் –** திரு.செ. செய்யது முகம்மது கலிபா சாகிப், **இராமநாதபுரம் –** திரு.ஜெகாதா, **மதுரை –** திருக்குறள் செம்மல் ந. மணிமொழியன், **திண்டுக்கல் –** திரு.மா. பெரியசாமி (எ) தமிழ்ப் பெரியசாமி, **தேனி –** தமிழாசிரியர் ப. பாண்டியராசன், **விருதுநகர் –** முனைவர்

கா.இராமச்சந்திரன், **திருநெல்வேலி** – முனைவர் கேப்டன் பா.வேலம்மாள், **தூத்துக்குடி** – திரு. கா.அல்லிக்கண்ணன், **கன்னியாகுமரி** – முனைவர் சிவ. பத்மநாபன்

தமிழ்ச்செம்மல் விருது பெறும் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூபாய் 25,000/– பாராட்டுரை மற்றும் பொன்னாடை வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் மேலே அறிவிக்கப்பட்ட விருதாளர்களுக்கு விருதினை 25.04.2017 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்குவார்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9

நாள் : 24.4.2017